தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2012
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition 2012
Australian Society of Graduate Tamils

# வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி
# மாதிரி வினாக்கள்
# ஆரம்ப பிரிவு (5 வயது)

படத்தோடு ஒட்டிய உரையாடல்:

1) இந்தப் படத்தில் என்ன இருக்கின்றன? (பழங்கள்)
உங்களுக்கு பிடித்தமான பழம் எது? ஏன்?
இந்தப் பழங்களின் நிறங்கள் எவை?

2) இந்தப் படம் என்ன? (பந்து)
நீங்கள் பந்து விளையாடுகிறனீங்களா?
இந்தப் பந்தின் நிறங்கள் எவை?

3) இந்தப் படம் என்ன? (யானை)
இதனை எங்கு பார்ப்பீர்கள்?
யானை என்ன நிறம்? முகத்தில் என்ன இருக்கும்?

4) இந்தப் படம் என்ன? (பணம், காசு)
இதில் இரண்டு வகை இருக்கின்றன அவை எவை?
(தாள், நாணயம்)
இதனை எதற்கு பயன்படுத்துவீர்கள்?

5) இந்தப் படம் என்ன? (புகையிரதம், தொடர் வண்டி)
இதில் போயிருக்கிறீர்களா?
உங்கள் புகையிரதப் பயணம் பற்றி சொல்லுங்கள்?

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2012
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition 2012
Australian Society of Graduate Tamils

# வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி மாதிரி வினாக்கள்

## கீழ்ப் பிரிவு (6-7 வயது)

(பகுதி-1)

1) உங்கள் பெயர் என்ன?
அம்மா அப்பாவின் பெயர்என்ன?
வீட்டில் யார் யார் இருக்கின்றார்கள்?

2) இன்றைக்கு என்ன சாப்பிட்டனீங்கள்?
உங்களுக்கு விருப்பமான உணவு என்ன?
அதைப் பற்றிச் சொல்லுங்கோ?

3) என்னனென்ன விளையாட்டுகள் உங்களுக்குத் தெரியும்?
அதில் உங்களுக்கு பிடித்தமான விளையாட்டு எது?
ஏன் பிடிக்கும்?

4) நீங்கள் வானொலி, தொலைக்காட்சி பாக்கிறனீங்களா?
என்ன நிகழ்ச்சிகளை விரும்பிப் பார்ப்பீர்கள்?
உங்களுக்குப் பிடித்தமான (சினிமா) படம் எது? ஏன்?
அதன் கதையை சுருக்கமாக சொல்லுங்கள்?

5) வாசிப்பு பகுதி:
மற்றத் தாளைப் பார்க்கவும்.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2012
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition 2012
Australian Society of Graduate Tamils

# வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி மாதிரி வினாக்கள்

## கீழ்ப் பிரிவு (6-7 வயது)

(பகுதி-2)

கீழே தரப்பட்ட சொற்களையும், சொற்றொடர்களையும் வாசிக்கவும்:

1) அம்மம்மா
2) குதிரை
3) மாம்பழம்
4) பதினைந்து
5) தொலைக்காட்சி
6) வானத்தின் நிறம் நீலம்
7) சுத்தம் சுகம் தரும்.
8) பழங்கள் சாப்பிடுவது உடலுக்கு நல்லது.
9) வெகு விரைவில் தமிழருக்கு நல்ல காலம் பிறக்கும்.
10) அவுஸ்திரேலியா பல நாட்டு மக்களுக்கு புகலிடம் அளித்து வருகின்றது.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2012
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition 2012
Australian Society of Graduate Tamils

# வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி மாதிரி வினாக்கள்

## மத்திய பிரிவு (8-9 வயது)

(பகுதி-1)

1) நீங்கள் நேற்று நித்திரையால எழும்பினதில இருந்து என்னனென்ன செய்தனீங்கள்?
என்ன சாப்பிட்டீங்கள்?
பள்ளிக்கூடம், பாடங்கள், மற்ற ஈடுபாடுகள் பற்றி

2) ஓய்வு நேரங்களில் என்ன செய்வீர்கள்?
விளையாட்டு, வானொலி, தொலைக்காட்சி.......
வீட்டில நீங்கள் என்ன வேலைகள் செய்வீர்கள்?

3) உங்கள் வீட்டில் பாட்டன்/ பாட்டி இருக்கின்றார்களா?
அவர்களுடன் என்ன மொழியில் பேசுவீர்கள்?
ஏன் நீங்கள் தமிழில கதைக்க வேண்டும்?

4) நீங்கள் புத்தகங்கள் படிப்பது உண்டா?
உங்களுக்கு தமிழ் படிக்க வேண்டும் என்ற விருப்பம் உண்டா? ஏன்?
நீங்கள் படித்த தமிழ்ப் புத்தகம் பற்றிச் சொல்லுங்கோ?

5) வாசிப்புப் பகுதி:
மற்றத் தாளைப் பார்க்கவும்

தொடர்புகளுக்கு: PO Box 4040 Homebush NSW 2140. Tele: 0403 249 111 or 0420 627 162
E-mail:asogt.tc@gmail.com Web: www.tamilcompetition.org

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2012
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition 2012
Australian Society of Graduate Tamils

# வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி மாதிரி வினாக்கள்

## மத்திய பிரிவு (8-9 வயது)

(பகுதி-2)

1) நான் ஒரு தமிழனாக இருப்பதில்ப் பெருமைப்படுகின்றேன்.

2) புலம்பெயர்ந்த தமிழர்கள் ஆகிய நாம் பல வழிகளில் தாய்நாட்டு மக்களுக்கு உதவி வருகின்றோம்.

3) உலகின் பல நாடுகளில் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழ்ந்து வருகிறார்கள்.

4) ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் பங்குபற்றவென பல அவுஸ்திரேலிய விளையாட்டு வீரர்கள் இங்கிலாந்துக்குச் சென்றுள்ளார்கள்.

5) அவுஸ்திரேலியாவிலும் நியூசிலாந்திலும் பல மாநகர்களில் தமிழ் ஊக்குவிப்புப் போட்டிகள் நடைபெறுகின்றன.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2012
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition 2012
Australian Society of Graduate Tamils

# வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி
# மேற்பிரிவு பிரிவு (10-12 வயது)

(பகுதி-1)

1) அவுஸ்திரேலியாவைப் பற்றிச் சொல்லுங்கோ?

2) உங்களுக்கு மறக்கமுடியாத ஒரு சம்பவத்தைப் பற்றிச்
சொல்லுங்கோ? (சந்தோசமானதோ அல்லது துக்கமான)

3) உங்கள் ஆரம்பகால வழ்க்கையைப் பற்றிச் சொல்லுங்கோ?
எங்கை பிறந்தீர்கள், எங்கை வாழ்ந்தீர்கள்?
எங்கை எங்கையெல்லாம் படிச்சீங்கள்?

4) நீங்கள் சென்ற வெளிநாடுகள் எவை? அவற்றில் உங்களை மிகவும் கவர்ந்த நாடு அல்லது இடம் எது? அதனைப் பற்றிக் கூறுங்கள்?

5) வாசிப்புப் பகுதி:

மறுபக்கம் பார்க்க.

பாரதியார் ஒரு தமிழ்ப் புலவர். அவர் தமிழ் நாட்டிலே எட்டயபுரத்திலே பிறந்தார். அவரின் இயற்பெயர் சுப்பிரமணியன். அவர் பதினொரு வயதிலேயே புலமை மிக்கவராக விளங்கினார். அதனால் பாரதி என்ற பட்டம் பெற்றார்.

பாரதியார் தமிழ் உணர்வு மிக்கவர். பாரதியார் தேசப்பற்று நிறைந்தவர். இந்திய நாட்டின் விடுதலைக்காக உழைத்தவர். இன்றைய சமுதாயத்தின் குறைகளைச் சுட்டிக் காட்டியவர்.

தமிழ் ஊக்குவிப்புப் போட்டி 2012
அவுஸ்திரேலியப் பட்டதாரிகள் தமிழர் சங்கம்
Tamil Competition 2012
Australian Society of Graduate Tamils

# வாய்மொழித் தொடர்பாற்றல் போட்டி மாதிரி வினாக்கள்

## அதிமேற்பிரிவு பிரிவு (13-17 வயது)

(பகுதி-1)

1) சுனாமி பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அதனால் பல
அனர்த்தங்கள் நிகழ்ந்தன. நீங்கள் அறிந்த சில அவல நிலைகள் பற்றி எமக்குச் சொல்லுங்கோ?

2) உலகில் பல தலைவர்கள் இருக்கிறார்கள், இருந்து இருக்கிறார்கள்.
அவர்களில் உங்களுக்குப் பிடித்தமான ஒரு தலைவர் யார்? அவரை என்ன காரணங்களுகாக பிடிக்கும்?

3) பரீட்சையில் சித்தியடைவதையோ அல்லது ஒரு வெற்றி கிடைக்கும் பட்சத்தில் அதை எப்படியெல்லாம் கொண்டாடுவீர்கள்?

4) உங்கள் எதிர்கால இலட்சியம் என்ன? அதற்கு நீங்கள் எடுத்துவரும் திட்டங்கள் அல்லது நடவடிக்கைகள் என்ன?

5) வாசிப்புப் பகுதி: வழங்கப்படும்.